பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 07 2025 7 15

## ஆகாஷவாணி <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2. கடனை வசூலிப்பதில் நிதிநிறுவனங்கள் நேர்மையாகவும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

3. பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட ஐந்து நாடுகள் அரசுமுறைப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது என பிஜேபி தெரிவித்துள்ளது.

4. பங்களாதேஷில் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகளை டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று அந்நாட்டு அரசு துறைகளை, தலைமை ஆலோசகர் திரு முகமது யுனுஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஆசிய இளையோர் மல்யுத்தப் போட்டியில் இந்தியா 9 தங்கம் உட்பட 19 பதக்கங்களை வென்றுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள பீகார் மாநிலத்தில் சிறப்பு தீவிர திருத்த நடைமுறையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு **Sudhanzhu Dhulia** - திரு **Joimalya Bagchi** ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது நீதியின் படி கொண்டுவரப்பட்டாலும், அடையாள ஆவணங்களான ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை ஏற்பது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது அரசியல் சட்டப்படி அத்தியாவசியம் என்றாலும் சிறப்பு தீவிர திருத்தத்தை தற்போது ஏன் நடைமுறைப்படுத்த வேண்டும் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இந்த நடைமுறையை நாடுமுழுவதும் ஏன் நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் அவர்கள் வினவினர்.

>><><><<

கடனை வசூலிப்பதில் நிதிநிறுவனங்கள் நேர்மையாகவும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று வங்கிகள் அல்லாத நிதிநிறுவனங்களின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று பேசிய அவர், ரிசர்வ் வங்கியின் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதிநிறுவனங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

வாடிக்கையாளர்களின் திரும்பச் செலுத்தும் திறனை கருத்தில் கொண்டு அவசிய தேவைகளின் அடிப்படையில் கடன் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனிநபர்களை கடன் வாங்குமாறு நிதி நிறுவனங்கள் வற்புறுத்தக்கூடாது என்றும், வட்டி விகிதங்களும் நியாயமான அளவில் இருத்தல் அவசியம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

>><><><<

ஆசியான் உறுப்பு நாடுகளுடன் நேர்மையான வர்த்தகம் மற்றும் சம அளவிலான வளர்ச்சி உறுதி செய்வதை எதிர்நோக்கியிருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இதுதொடர்பாக, மலேசிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு **Tzafrul Aziz** வுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஆசியான் இந்தியா வர்த்தக ஒப்பந்தம் குறித்து அப்போது தாம் ஆலோசனை நடத்தியதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே ஒருங்கிணைந்த பொருளாதார ஒப்பந்தம் தொடர்பான விவாதமும் தங்களுடைய பேச்சில் இடம்பெற்றதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

>><><><<

நாட்டின் வளர்ச்சியை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முழு அளவில் உறுதி செய்திருப்பதாக மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை தொடங்கி வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத் தொகை வழங்குவது வரை மத்திய அரசு முழுமையான வளர்ச்சியை உறுதி செய்துள்ளது என்று கூறியுள்ளார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், பொருளாதார முன்னேற்றமும் ஒன்றுக்கு ஒன்று சம அளவில் சென்று கொண்டிருப்பதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பொருளாதார வளர்ச்சி குறித்து இணைய தளத்தில் வெளியான கட்டுரையையும் அவர் மறுபதிவிட்டுள்ளார்.

>><><><<

மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட அசாம், மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஆயிரத்து 66 கோடி ரூபாய் நிதியை விடுவிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அசாம் மாநிலத்திற்கு 375 கோடி ரூபாயும் மணிப்பூருக்கு 29 கோடி ரூபாயும், மேகாலயாவுக்கு 30 கோடி ரூபாயும் விடுவிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மிசோரம் மாநிலத்திற்கு 22 கோடி ரூபாய், கேரளா மாநிலத்திற்கு 153 கோடி ரூபாய், உத்ராகண்ட் மாநிலத்திற்கு 455 கோடி ரூபாய் விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையின் போது இந்த மாநிலங்கள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் கடுமையான பாதிப்பை எதிர்கொண்ட நிலையில் தற்போது இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

>><><><<

கானா, அர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட ஐந்து நாடுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்சு திரிவேதி, பிரதமரின் இந்த பயணம் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளதாக கூறினார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது பிரதமர் முன்வைத்த தீவிரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாத பிரச்சினையில் இந்தியாவுக்கு ஒருமித்த ஆதரவை அந்த மாநாட்டில் அனைத்து நாடுகளும் அளித்ததாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தால் பாதிக்கப்படுவோரையும் அதை தூண்டி விடுவோரையும் ஒரே நிலையில் வைத்து பார்க்கக்கூடாது என பிரதமர் எடுத்துரைத்ததை திரு சுதான்சு திரிவேதி தெரிவித்தார்.

>><><><<

ஐரோப்பிய பல்கலைக் கழகங்களுக்கு முன்பாகவே நாளந்தா உள்ளிட்ட இந்திய பல்கலைக் கழகங்கள் தலைசிறந்து விளங்கியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், பழங்கால இந்தியா அறிவுசார் மையங்களின் தாயகமாக விளங்கியது என்று கூறினார்.

நாளந்தா போன்ற கல்வி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளுடன் கூடிய அறிவுசார் நூலகங்களை கொண்டிருந்ததை திரு ஜெக்தீப் தன்கர் சுட்டிக்காட்டினார்.

நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கலந்து கொண்டார்.

>><><><<

கோவை குண்டுவெடிப்பு வழக்கு மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் நிகழ்ந்த கொலை வழக்குகளில் தேடப்பட்டு வந்த சாதிக் என்கிற டெய்லர் ராஜா, கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்தில் தமிழக காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உளவு தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டதாகவும், கடந்த 29 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர் என்றும் தீவிரவாத தடுப்புப் பிரிவு காவல்துறை தெரிவித்துள்ளது.

>><><><<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை எளிதாக கடந்து விட முடியாது என்றாலும், தற்போது ஜம்மு கஷ்மீரின் சுற்றுலாத் துறை மீண்டு வந்துள்ளதாக முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் சுற்றுலா தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், பஹல்காம் தாக்குதலின் போது சுற்றுலாப் பயணிகளுக்கு நேர்ந்த கொடுமை மிகுந்த கவலை அளிக்கக்கூடியது என்று கூறினார்.

அந்த நேரத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது அமர்நாத் புனித யாத்திரை தொடங்கியுள்ள சூழலில் ஜம்மு கஷ்மீருக்கு விமானப் போக்குவரத்து சேவைகள் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருப்பதாகவும் திரு உமர் அப்துல்லா கூறினார்.

>><><><<

அமர்நாத் குகைக் கோயிலுக்கு ஜம்முவின் பகவதி நகர் முகாமில் இருந்து இன்று காலை 7 ஆயிரத்து 300 பேர் கொண்ட குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்.

284 வாகனங்களில் பலத்த பாதுகாப்புடன் அவர்கள் அமர்நாத் நோக்கி சென்றதாகவும், நேற்று வரை அமர்நாத் பனி லிங்கத்தை 1 லட்சத்து 28 ஆயிரம் பேர் தரிசனம் செய்திருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

பங்களாதேஷில் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகளை டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று அந்நாட்டு அரசு துறைகளை, தலைமை ஆலோசகர் திரு முகமது யுனுஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

டாக்காவில் இன்று நடைபெற்ற தேர்தல் துறை தொடர்பான கூட்டத்தில் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இதில் உள்துறை ஆலோசகர் திரு ஜகாங்கீர் ஆலம் சவுத்திரி மற்றும் சட்ட அமலாக்கத் துறை அமைப்புகளின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தலைமை ஆலோசகரின் செயலாளர் திரு **Shafiqul Alam,** தேர்தல் நடைபெறும் நேரத்தில் 7 நாட்களுக்கு முன்னதாகவே சட்டம் ஒழுங்கை பராமரிக்க ஏதுவாக தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக கூறினார்.

8 லட்சம் அதிகாரிகள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், அவர்களுக்கு தேர்தலுக்கு முன்கூட்டியே பயிற்சி வழங்கப்படும் என்றும் திரு **Shafiqul Alam** கூறினார்.

>><><><<

தென்கொரியாவில் கடந்த ஆண்டு சர்ச்சைக்குரிய ராணுவ சட்டத்தை அமல்படுத்த முடிவெடுத்தது தொடர்பான வழக்கில் அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு யூன் சுக் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய இந்த முடிவால் தென்கொரியாவில் கடந்த ஏப்ரல் மாதம் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு அவருக்கு எதிராக பதவிநீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் தற்போது திரு யூன் சுக்-கிற்கு எதிராக சியோல் மாவட்ட நீதிபதி கைது உத்தரவு பிறப்பித்தார்.

சாட்சியங்களை அழித்தது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவர் 7 மணிநேர விசாரணைக்கு பின்னர் சிறைக்காவலுக்கு அனுப்பப்பட்டார்.

>><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் மல்யுத்தப் போட்டியில் இந்தியா 9 தங்கம் உள்ளிட்ட 19 பதக்கங்களை வென்றுள்ளது.

கிர்கிஸ்தானில் நடைபெற்ற 15 வயதிற்குட்பட்டோருக்கான இப்போட்டியின் ஆடவர் பிரிவில் 6 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தையும், மகளிர் பிரிவில் 3 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கத்தையும் இந்தியா கைப்பற்றியது.

---------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

**Lords** -ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 105 ரன் எடுத்துள்ளது.

-------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரத்யுஷா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 4-6, 6-1 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Jane Dunyon** -ஐ வென்றார்.

>> <<